# பேச்சை ஆரம்பிக்க அரசு முயற்சி செய்யவில்லை

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 28 இதழ்: 151
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 12-7-1991

## அன்ரன் பி.பி.ஸிக்கு பேட்டி

(யாழ்ப்பாணம்)
இனப் பிரச்னைக்கான தீர்வு குறித்து பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஏற்றவிதத்தில் இலங்கை அரசு எதனையும் ஏற்படுத்த வில்லை என விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த வாரம் பி.பி.ஸி. செய்தியாளருக்களித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை இனப்பிரச்சனைக்கு ராணுவதீர்வு சாத்தியமில்லை

(லண்டன்)
இலங்கையின் இனப்பிரச்சனைக்கு இராணுவ தீர்வு சாத்தியமில்லை என்பது தற்போது நன்கு புலனாகிறது. பேச்சுவார்த்தை நடாத்த இதுவே தகுந்த நேரம். நிபந்தனையற்ற பேச்சுக்கு புலிகள் தயார்.
இவ்வாறு புலிகளின் சர்வதேச விவகாரப்பொறுப்பாளர் திரு. கிட்டு லண்டனில் வைத்து 'இந்தியாவின் வெளிநாட்டு செய்திச்சேவை' (ஐ. ஏ. என். எஸ்) நிருபர் சஞ்சய்சூரிக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

(3-ம் பக்கம் பார்க்க)

## ★ பல படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு

# ஆனையிறவு இராணுவமுகாம் புலிகளிடம் வீழும் நிலையில்!

[நமது அலுவலக நிருபர் தேவா]

**ஆனையிறவு இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் நடத்திவரும் கடும் தாக்குதலையடுத்து முகாம் எந்நேரமும் புலிகளிடம் வீழ்ச்சியடையும் நிலையிலிருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இம்முகாமின் பல காவலரண்கள் நேற்று புலிகளிடம் வீழ்ச்சியடைந்துள்ளதுடன், அங்கிருந்த பல நவீனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.**

**இராணுவ தரப்பில் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

## பல காவலரண்கள் வீழ்ந்தன

ஆனையிறவு இயக்கச்சிப் பிரதான வீதிக் காவலரண்கள், உப்பள உல்லாச விடுதி இராணுவ முகாம் ஏற்கனவே தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. தற்போது புலிகள் முகாமை சுற்றிவளைத்து படையினரை வெளியேற விடாது உக்கிர தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ மேஜர் பலி

ஆனையிறவு முகாம் மீது புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் மேஜர் தரத்திலான முகாமின் உயர் அதிகாரி ஒருவர் உட்பட 16 படையினர் கொல்லப்பட்டும் 28 சிப்பாய்கள்படுகாயமடைந்துமுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் நடைபெற்ற தாக்குதல்களில் மிகப் பெரிய தாக்குதல் இதுவென பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் வால்டர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணத்தின் வாயில் எனக்கருதப்படும் ஆனையிறவு இராணுவ முகாமினைக் கைப்பற்ற புலிகள் மிகப் பெரிய தாக்குதலை நடத்தி வருகிறார்கள். எனவே புலிகள், முக்கியமான இந்த முகாமினை பிடித்துவிடக்கூடாதென தாம் தொடர்ந்து போராடுவதாக அவர் தெரிவித்தார்.

## 200 யார் தூரத்தில் மோதல்

இம்முகாமிலிருக்கும் இராணுவத்தினருக்கு ஹெலிகொப்டர்கள், போர் விமானங்கள் மூலமே தாம் உதவிகள் வழங்கிக் கொண்டிருப்பதாகவும் மேலும் நேற்று முன்தினம் அதிகாலை புலிகள் கைக்குண்டு, ரொக்கட் மோட்டார் சகிதம் உக்கிர தாக்குதலை மேற்கொண்டதாகவும், தற்போது முகாமிலிருந்து 200 யார் தூரத்தில் கடும் யுத்தம் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## முகாமில் புகை மண்டலம்

யுத்தம் அகோரமாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆனையிறவு முகாம் பகுதியை சூழ ஒரே புகைமண்டலமாய் தென்படுவதாய் வவுனியாவிலிருந்து நேற்றிரவு வந்த ஒருவர் தெரிவித்தார். அவர்மேலும் தெரிவிக்கையில்; முகாமையண்டிய பகுதிகளில் பாரிய குண்டு சத்தங்கள் கேட்டவண்ணமிருந்தன. முகாமை நோக்கி புலிகள் பல திசைகளிலும் முன்னேறிச் சென்றவண்ணமிருந்ததையும் காணக்கூடியதாயிருந்ததாயும் குறிப்பிட்டார்.

## வவுனியாவுக்கு படை விரைவு

ஆனையிறவு முகாம் மீது அகோர தாக்குதல் ஆரம்பமானதையடுத்து தென்பகுதியிலிருந்து வவுனியாநோக்கி பெருமளவு படைகள் விரைந்த வண்ணமிருப்பதாக 'ஏஜென்ஸி' செய்தியொன்றுதெரிவித்தது.

[4ம் பக்கம் பார்க்க]

## வீடுகளை காலிசெய்யுமாறு ஈழத்தமிழர்க்கு நிர்ப்பந்தம்

[சென்னை]
தமிழகத்தில் வாடகை வீடுகளில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களை வீடுகளை காலிசெய்யுமாறு வீட்டு உரிமையாளர்கள் நிர்ப்பந்தித்து வருகிறார்கள்.
தமிழக பொலிஸார் திடீர் திடீரென ஈழத்தமிழர் வீடுகளில் நடத்திவரும் சோதனைகளை அடுத்தே வீடுகளைவிட்டு வெளியேறுமாறு கேட்கப்படு

(4ம் பக்கம் பார்க்க)

## மன்னிப்புச்சபை செய்திக்கு இலங்கை அரசு மறுப்பு!

(கொழும்பு)
இலங்கையின் வடக்கு-கிழக்குப் பகுதியில் நீதி விசாரணையின்றி ஆயிரக் கணக்கானோருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது அல்லது அவர்கள் காணமல் போயிருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கைக்கு இலங்கை அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.
இவ்வறிக்கை மிகைப்படுத்தப்பட்ட செய்தி என்றும் அரசு மேலும் தெரிவித்தது.

## மட்டக்களப்பு முஸ்லிம்கள் தமிழர்மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)
மட்டு. மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து முஸ்லிம இளைஞர்கள் தமிழர்களைத் தாக்கியும், கொள்ளையடித்தும், கடத்தியும் வருகிறார்கள்.
இம்மாதம் 7-ம், 8-ம் திகதிகளில் நற்பிட்டிமுனை, கற்பிட்டிமுனை ஆகிய இடங்களிலுள்ள 50 முஸ்லிம் இளைஞர்கள் கத்தி, வாள் சகிதம் நாகுதன்வெளி என்னும் கிரா

(4ம் பக்கம பார்க்க)

## பொம்மருக்குஅஞ்சி கடலில் குதித்தவர்களில் ஒருவர்பலி

[யாழ்ப்பாணம்]
வானத்தில் பொம்மர் வட்டமிட்டதைக் கண்டு கடலில் குதித்தவர்களில் ஒருவர் பலியானார். இருவரைக் காணவில்லை.
நேற்று நண்பகல் சங்குப்பிட்டித்துறையில் பொம்மர் விமானம் வட்டமிட்டவேளையில் அங்கு நின்ற எட்டுப்பேர் பாதுகாப்பிற்காகக் கடலில் குதித்தார்கள்.
இவ்வாறு குதித்தவர்களில் ஐவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர். ஒருவர் சடலமாக

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வரதர் மாணவர் அகராதி

ஆங்கிலம் பயில்வோருக்கு மிகவும் தேவையான ஆங்கில, தமிழ் அகராதி, 18,400 ஆங்கிலச் சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்கள் மிகச் சிறந்த மலிவுவிலை அகராதி இதுவே. ரூபா 95. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். தொகையாகப் பெறுவதற்கு: ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம். பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி 4976)

## புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும்புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 14-07-91 ஞாயிறு மு. ப. 8-00/ மு.ப. 10-30/ பி. ப. 1-00. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி. ப. 4-00 மக்கள் வைத்தியசாலை (முன்பாக) கொக்குவில் மேற்கு. நடைபெறும். பதிவு செய்யவும். ஆண்டு 5 Paper class நடைபெறும். (சி-4970)

## கொம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language - புதிய பிரிவு ஆரம்பம்: 15-07-91 2-30 மணி வகுப்புகள் திங்கள், புதன் 2-30 — 4-30 I. A. B. வகுப்புகளும் நடைபெறுகின்றன. School of Business Administration, 16, 3-வது குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [சி-4967]

## தையல் மெஷின்கள்

பாவித்த தையல் இயந்திரங்கள் (மெஷின்கள்) நியாய விலைக்கு வாங்கப்படும், விற்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 103, தையல் இயந்திர விற்பனை நிலையம், சாவகச்சேரி. (சி 4969)

## தவறிவிட்டது

K. வரதராசா வளுப்போடை காரைநகர் கிழக்கு. என்பவருடைய அடையாள அட்டை இல 562651900V கந்தர்மடம் சந்திக்கும் அம்மன் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பொ. ஞானதேசிகன் No. 12, ரெயில்வே ரோட், கந்தர்மடத்தில் ஒப்படைக்கவும். (சி-4982)

## லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு இணிங்கித் தோட்ட முத்துக்குமாரசுவாமி ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆலய பிரதம குருவின் அனுசரணையுடன் லட்சார்ச்சனை நடைபெற்று வருகிறது.

## தமிழ் வழி

எழுத்தாளர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே நீங்கள் எழுதுபவற்றையும் பேசுபவற்றையும் தூய தமிழில் செய்ய விரும்புகிறீர்களா? கொக்கூர் கிழான் தொகுத்த 'தமிழ்வழி' நூல் உங்களுக்குத்துணை செய்யும். குழந்தைகளுக்கு தூய தமிழில் அழகிய பெயர்கள் வைப்பதற்கும் இந்நூலில் ஒரு பட்டியல் உண்டு. இது ஒரு வரதர் வெளியீடு. ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். [சி-4964]

## புலமைப் பரிசில் பரீட்சை - 91

ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை (3வது தொடர்) ஞாயிறு 14-7-91 பி. ப. 2 - 4-30 வரை நடைபெறும். வெளிமாணவரும் தோற்ற அனுமதிக்கப்படுவர். தொடர்பு கொள்ளவும். எலைற் கல்வி நிறுவனம் 99, மானிப்பாய் வீதி (வண்ணை தபாலகம் முன்பாக) யாழ்ப்பாணம். (சி-4984)

## கார்மேல் மாதா திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் பரிசுத்த கார்மேல் அன்னையின் வருடாந்த திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து ஆறுநாட்கள் நடைபெறும் இத்திருவிழாவின் இறுதிநாளான 16ம்தேதி செவ்வாய்க்கிழமை காலை திருநாள் திருப்பலிப்பூசையும், திருச்சுரூப ஆராதனையும் நடைபெறவுள்ளது. (வி)

## மடுமுகாமிற்கு 4 டாக்டர்கள்

(யாழ்ப்பாணம்)

மடு அகதி முகாமுக்கு 4 பிரான்ஸ் டாக்டர் பணி புரிவதற்காக சென்றிருக்கிறார்கள். (152)

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

10 - 07 - 91 ஈழநாடு பத்திரிகையில் வெளியாகிய சரசாலை க. குமாரவேலு (மணமகன்), வட்டக்கச்சி வே. ஜெயலட்சுமி (மணமகள்) ஆகியோரின் திருமணம் நாட்டு நிலைமையை உத்தேசித்து தவிர்க்கமுடியாத காரணங்களினால் சாவகச்சேரி சிவன்கோவிலுக்கு பதிலாக சரசாலையில் மணமகள் இல்லத்தில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமண நிகழ்வு: 12-07-91 வெள்ளிக்கிழமை

வரவேற்பு உபசாரம் வட்டக்கச்சியில் மணமகள் இல்லத்தில் 15 - 07 - 91 நண்பகல் 1-00 மணிக்கு நடைபெறும்.

(இரு வீட்டார் அறிவித்தல்)

[சி 4985]

## யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்


### யாழ். கிளை

மேற்படி கூட்டம் 13-7-91 சனிக்கிழமை மு. ப. 10-30 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள பிறிமியர் பேக்கரியில் நடைபெறும். யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பேக்கரி உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

செயலாளர்

(சி-4983)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வில்லியம் ஜெயராஜா

(நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனிக்குளம்)

ஆண்டவன் படைப்பு: 20-04-1949 அநியாய அழிப்பு: 12-07-1989

"என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்"

அன்பின் திரு உருவாய்; பண்பின் உறைவிடமாய்
எம் குடும்ப ஒளிவிளக்காய்; நீர் இருப்பீர் என்றிருந்தோம்
ஆறாத் துயரில் எம்மை எல்லாம் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் நீர் கொண்டு விட்டதேன் ஐயா!

உங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்,
அன்பு மனைவி, ஆசை மகள்,
பெற்றோர், சகோதரர்கள், மாமன், மாமி,
மைத்துனர்கள், உறவினர்கள்.

சில்லாலை (சி-4977)

# பற்றீஸியன்

## தொழிற் பயிற்சி நிறுவனம்

# Patrician Institutes

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள்
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

1: **COMPUTER PROCESSING COURSES**

(1) Computer Programming in Basic Language and disk Operating System (MS. DOS)

Duration - 4 Months

(2) Word Processing and MS. DOS (Word Star - 4000)

Duration - 3 Months

(3) அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றது.
ஆரம்பம்: 20-07-91 சனிக்கிழமை காலை 9-00 மணி

2. **CITY AND GUILDS OF LONDON INSTITUTE**

Quantity Surveying (Part - 1) (6 Months)
COMMENCE 18-07-91 4-00 P. M.

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 17- 07- 91 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

3. **SHORT - HAND & TYPING (ENGLISH)** தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும்
4. **ELECTRICAL WIRING** - மின்சார இணைப்பு (3 மாதம்)
5. **MOTOR MECHANISM** - மோட்டார் வாகனம் திருத்துதல் (6 மாதம்)
6. **MOTOR WINDING** - மோட்டர் வைன்டிங் (4 மாதம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறுபவாகளின் நலன் கருதி பின்வரும் புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றது.

7. **PLUMBINC** — நீர்க்குளாய் இணைப்பு [3 மாதம்]
8. **GENERAL ELECTRICIAN** - (ஜெனரல் எலக்ரீசியன்) காலம் (4மாதம்)

இப் பயிற்சி நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| I | அடிப்படை மின்சாரம் (AC / DC) | Basic Electricity (AC / DC) |
| II | மோட்டர் வைன்டிங் | Motor Winding |
| III | ஆமச்சர் வைன்டிங் | Armature Winding |
| IV | டிரான்ஸ் போமர் வைன்டிங் | Transformer Winding |
| V | கவுஸ் வயரிங் | House Wiring |
| VI | எல்லாவிதமான மின்உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல் | Repairing of all type of Electrical Equipments |

9. **SPECIAL ENGLISH CLASSES** - (விசேட ஆங்கில பயிற்சி நெறி)

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையிலும் நன்றாக எழுத, பேச, வாசிக்க மிகக் குறுகிய காலத்தினுள் பயிற்சி பெறுவதற்கு வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக விபரங்களுக்கு:

பதிவாளர்
பற்றீஸியன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**REGISTRAR**
Patrician Institute of Higher Studies,
59, St. Patrick's Road,
Jaffna.

[எ-1433]

# வடபகுதிக்கு வெளியே செல்வதற்காக விண்ணப்பிப்போர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

[வடபகுதிக்கு வெளியே செல்வதற்காக 'பாஸ்' பெறுவதற்கு விண்ணப்பிப்போர் பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்து தமது அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாமென தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது ]

01. குறிப்பிட்ட கடைகளில் விற்பனையாகும் விண்ணப்பப் படிவத்தை நூறு ரூபா (100/-) பணம் செலுத்தி பெற்று விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, அவரவர் சொந்த இடங்களிலுள்ள கிராம சேவையாளர் பிரிவில் மாத்திரம் ஒப்படைத்து, ஏழு நாட்களின் பின்னர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**விதிவிலக்குகள்**

1. வெளி மாவட்டத்தைச் சேர்ந்த கல்வி பயிலும் மாணவர்களாயின், அவர்கள் மறுமலர்ச்சிக்கழகத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட சிபார்சுக் கடிதத்தைக் கொடுத்தும், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனின் அவர்களின் தொடர்பகங்களிலும், ஏனையோர் அவசர அனுமதி வழங்கும் காரியாலயங்களிலும் இலவச விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து அக்காரியாலயங்களிலேயே அவர்களுக்குரிய அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என உறுதிப்படுத்தின் அவர்களின் தொடர்பகங்களில் 15/- (ரூபா) பணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து அக்காரியாலயங்களிலேயே அவர்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. அரச கூட்டுத்தாபனங்களில் வேலை செய்வோர் வேலையின் நிமித்தம் வெளியே செல்வதாயின் அதனை உறுதிப்படுத்தும் விதத்தில் மேலதிகாரியின் உறுதிப்படுத்தப்பட்ட சிபார்சுக் கடிதத்தை அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் ஒப்படைத்து 15/- ரூபா பணம் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

**குறிப்பு:**

அனுமதி மறுக்கப்படின் எம்மால் வழங்கப்படும் அனுமதி மறுப்பு அட்டையை அவர்கள் விண்ணப்பப்படிவம் வாங்கிய கடைகளில் கொடுத்து முன்பு படிவத்திற்கென செலுத்திய பணத்தில் அரைவாசி (50/-)பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. 15/- ரூபாவிற்கு விண்ணப்பப் படிவத்தை பெறுபவர்களும், அவசர அனுமதி பெற வேண்டுமாயின் 100/- (ரூபா) பணம் செலுத்தி ஆட்பிணையுடனேயே அனுமதி பெற வேண்டும்

5. கிராம சேவையாளர் காரியாலயங்களில் விண்ணப்பித்தவர்கள் தமது அனுமதியையும் கிராம சேவையாளர் காரியாலயத்திலேயே பெற வேண்டும். அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்தில் வழங்கப்படமாட்டாது.

[விதி விலக்கு)

(வவுனியா, தீவுப்பகுதி காரியாலயங்கள்)

6. அவசர அனுமதி கோருவோர் எக காரணம் கொண்டும் அதை நிரந்தர அனுமதியாக பெற முடியாது. நிரந்தர அனுமதிக்கு விண்ணப்பித்தோர் அனுமதி கிடைக்கு முன், அவசரமாக செல்ல வேண்டியிருப்பின் பிரத்தியேகமான ஓர் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து அவசர அனுமதிக்குரிய விதிமுறைகளின்படி விண்ணப்பித்து தற்காலிக அவசர அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. கடைகளில் படிவங்களை விற்கும் கடை உரிமையாளர்கள் எக் காரணம் கொண்டும் 15/- ரூபாவிற்கோ அல்லது இலவசமாகவோ விண்ணப்பப் படிவங்களை விற்க இயலாது.

8. தமிழீழ இணக்கமன்றில் வழக்கு உள்ளவர்கள், எம்மால் வெளியே செல்ல வேண்டாம் என நிபந்தனை இடப்பட்டவர்கள் போன்றோர் விண்ணப்பிக்க இயலாது.

9. வவுனியாவில்தொழில்புரிவோர், வியாபாரத்தின் நோக்கம் எமது தடை முகாமைத் தாண்டிச் செல்வோர், லொறி சாரதி, கிளினர் போன்றோர் நிரந்தர அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்.

**02. அவசர அனுமதி**

குறிப்பிட்ட கடைகளில் விற்பனையாகும் விண்ணப்பப்படிவத்தை 100/- (ரூபா) பணம் செலுத்தி பெற்று அதனைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

(விண்ணப்பத்தில் மீட்பு நிதி செலுத்தியிருப்பின் பற்றுச் சீட்டு இலக்கம் குறிப்பிடப் பட்டிருத்தலுடன், அவசியம் பற்றுச்சீட்டு அனுமதி வழங்குபவருக்கு காட்டப்படல்வேண்டும். மண் மீட்பு நிதி செலுத்தாவிடின் மாத்திரம் சிற்றூரவையின் சிபார்சுக் கையொப்பம் பெற்றிருத்தல் வேண்டும். கிராம சேவையாளரின்சிபார்சு இதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.)

பின் நம்பிக்கையான ஆட்பிணையுடன் 100/- (ரூபா) பணமாகச்செலுத்தி விண்ணப்பித்து உடனேயே அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆட்பிணை நிற்பவர் கட்டாயமாக அவசர அனுமதி வழங்கும் காரியாலயத்திற்கு சமுகம் தரவேண்டும்.

**முன்னுரிமை**

விசேடபரீட்சைகள், மரணச் சடங்குகளில் நேரில் சமுகமளிக்க, சுகவீனமுற்றோரைக் கொண்டு செல்லல் போன்ற அத்தியாவசியத் தேவைகளை உறுதிப்படுத்துவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். (நாள் ஒன்றிற்கு 50ற்கு மேற்படாத அவசர அனுமதிகளே ஒரு காரியாலயத்தில் வழங்கப் படும்.)

**பொதுவான குறிப்புகள்**

1. ஒரு விண்ணப்பப் பத்திரத்தில் ஒரு குடும்பத்தில் ஐந்து பேருக்கு மேற்படாமல் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். ஒரு குடும்பத்தைத் தவிர்ந்த ஏனைய உறவினர்களின் பெயரையோ அல்லது மணமான விண்ணப்பதாரரின் பிள்ளைகளின் பெயரையோ ஒரே குடும்பமாக விண்ணப்பதாரர் ஒரே படிவத்தில் விண்ணப்பிக்க இயலாது.

2. தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பன இல்லாதோர் கண்டிப்பாக 2 X 2½ அங்குல படங்கள் இரண்டை கிராமசேவகரிடம் கொடுத்து உறுதிப்படுத்தி அவற்றில் ஒன்றை தம்முடன் வைத்தே பிரயாணம் செய்ய வேண்டும். 15 வயதிற்கு மேற்பட்டோர் இவை மூன்றில் ஏதாவது ஒன்று இல்லாமல் தடை முகாமைத் தாண்டிச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

3. மண் மீட்பு நிதி செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டின் போட்டோபிரதி விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட்டிருப்பின் மாத்திரமே சிற்றூரவையின் சிபார்சு எதிர்பார்க்கப்படமாட்டாது. ஏனையோர் கட்டாயம் சிற்றூரவையின் சிபார்சு பெற்றிருத்தல் வேண்டும். (தொடரும்)

# ஒற்றைக்கண் சிவராஜன் உருவத்தில் மாற்றம்

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின படுகொலைச் சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரியெனக் கருதப்படும் ஒற்றைக் கண் சிவராஜன் தனது உருவத்தில் சில மாற்றங்களைச் செய்துள்ளாரென தகவல் கிடைத்துள்ளதாக மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; ஒற்றைக்கண் சிவராஜன் தனது அடர்த்தியான மீசையை மழுங்க வழித்துள்ளாரென்றும் தனது ஒற்றைக் கண் சந்தேகத்தை மறைக்கும் முகமாக சில மாறுதல்களைச் செய்துள்ளாரென்றும் அண்மையில் கிடைத்த தகவல்கள் தெரிவிப்பதாகவும் கருத்து வெளியிட்டுள்ளனர். (க)

## எழுத்துப்பட்டறை

[யாழ்ப்பணாம்]

கத்தோலிக்க சமூகத் தொடர்பு சாதன ஆணைக்குழுவினர் வானொலி நாடக எழுத்துப்பட்டறை நிகழ்வு ஒன்றை நாளை நடத்தவுள்ளனர்.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இரு நாட்கள் நடைபெறவுள்ள இந்த வைபவத்தில் பல பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்புரைகள் நிகழ்த்தவுள்ளனர். [வி)

## கண் தானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட தீக்கு பலியான இளம் குடும்பப்பெண்ணின் இரு கண்களும் அவரது கணவரால் மேற்படி வைத்தியசாலைக்கு தானமாக வழங்கப்பட்டது.

கொழும்புத்துறை 2-ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி மேபிள் கணேசலிங்கத்தின் கண்களே தானமாக வழங்கப்பட்டன. (56]

## இன்று

(யாழ்ப்பாணம்]

நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காம சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று 12ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

27ம் திகதி சனிக்கிழமை ஆடித்திருவோணத்தில் தீர்த்த உற்சவமும் 28ம் திகதி ஞாயிற்றுக்கிமை திருக்கல்யாண உற்சவமும் நடைபெற்று 30ம் திகதி உற்சவம் நிறைவுபெறும். (க)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**கேள்விப் ப்த்திர அறிவித்தல்**

**மூன்று புசல் நெல் கொள்ளக்கூடிய 1250 வெற்றுச் சாக்குகளை வழங்குதல்**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு 1250 வெற்றுச் சாக்குகளை உடனடியாக வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகள் பின்வரும் விபரங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணமாக ரூபா 150/- காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கட்டணம் இன்றி அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

பெயர்
முகவரி
வெற்றுச்சாக்கின் கொள்ளளவு
ஒன்றுக்கான விலை
வழங்கக் கூடிய தொகை

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப் பத்திர தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்குகள் வழங்கலுக்கான கேள்விகள்'' எனக் குறிப்பிட்டு பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 23-7-91 காலை 10-00 மணிக்கு முன்னதாக கிடைக்கும் படியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 23-7-91 முற்பகல் 10 - 30 மணிக்குத் திறக்கப்படும்.

**பதிவாளர்.**

(ஏ-1434)

## இராசி பலன்

**12 - 07 - 1991**

**வெள்ளிக்கிழமை**

பிரதமை மு. இ. 11-09 வரை; புனர்பூசம் பி. ப. 3-31 வரை (சித்தயோகம் இராகு காலம் காலை 10-29 முதல் 11-59 வரை] சுபநேரம் காலை 5-59 முதல் 7-29 வரை.

மேடம்: குடும்ப மகிழ்ச்சி, இனசனஉறவு, தொழில்சிறப்பு.

இடபம்: வாக்கு கலகம் மனவேதனை, குடும்பவிரோதம்.

மிதுனம்; தொழில்கஷ்டம், குடும்ப அலைச்சல், பணவரவு,

கடகம்: இல்லறசுகம், வைத்திய செலவு, கூடாநட்பு.

சிங்கம்: பொதுஜனவிரோதம், தானதர்மம், குடும்ப சுகம்.

கன்னி: அமைதியான போக்கு, பெண்பகை, அதிகாரம்.

துலாம்: அதிகாரிகள் துன்பம், குறைகேட்டல், யோசனை

விருச்சிகம்: சகோதரபகை, பயணஅலைச்சல், கடன்சுமை.

தனுசு: குழந்தையுள்ளம், கனிவானபேச்சு, தொழில் பாராட்டு.

மகரம்: வெளியூர் செய்தி, திருமணப்பேச்சு, மனநிறைவு.

கும்பம்: தொழில் பிணக்கு, அயலவர் பகை, தெய்வீக செலவு.

மீனம்: குடும்ப சந்தேகம், தொழில் நஷ்டம், சோம்பல்.

- ஜோஸ்யர்

# அன்னை பூபதி நினைவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் கடந்தஏப்ரல் மாதம் நடாத்திய அன்னை பூபதி நினைவுப்பொது இறுதிப் போட்டி முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

மாவட்ட ரீதியிலும் கொத்தணி ரீதியிலும்மேற்பிரிவிலும் கீழ்ப்பிரிவிலும் அதிக புள்ளிகள் பெற்று பரிசுகள் பெறுவோரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐந்து மாவட்டங்களில் மாவட்ட மட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:

மன்னார் மேற்பிரிவு; க. சிவகுமார் பூநகரி ம. வி, கீழ்ப் பிரிவு: சி. நொறிஸ் விடத்தல் தீவு றோ. க. க பாடசாலை.

வவுனியாமேற்பிரிவு: ஞானப் பிரகாசம் ஞானசீலன் கனகராயன் குளம் ம. வி), கீழ்ப் பிரிவு: தனபாலசிங்கம் தருசினி கனகராயன் குளம் ம. வி)

மணலாறு: மேற்பிரிவு: வி. வசந்தி (அளம்பில் க. உ. வித்தியாசாலை), கீழ்ப்பிரிவு: இ. புனிதவதி (குமுழமுனை ம.வி)

முல்லைத்தீவு மேற்பிரிவு: சி. துஷாஜினி (ஒட்டு சுட்டான் ம. வி) கீழ்ப்பிரிவு: பெ. மேரி ரெஜினு (முள்ளியவளை வித்தியானந்தா)

கிளிநொச்சி மேற்பிரிவு: சிதம்பரப்பிள்ளை சிவதர்ஷனி [மல்லாவி ம. வி] கீழ்ப்பிரிவு: நிர்மலநாதன் சமுந்தன் [பரந்தன் இந்து ம.வி)

யாழ்ப்பாணம்: மேற்பிரிவு; அ. சுபாகரன் (யாழ். இந்து) கீழ்ப்பிரிவு: பு. செந்தில்குமாரன் (யாழ். இந்து).

[தொடரும்]

# இலங்கை-பெல்ஜிய உறவில் நெருக்கடி

[மட்றிட்]

தாய்வான் விமானப்படைக்கு பெல்ஜியத்திலிருந்து சென்ற 11,000 ரொக்கட் மோட்டார்களை இலங்கை பறிமுதல் செய்ததையடுத்து இலங்கை-பெல்ஜியம் உறவில் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

எந்தவித காரணமுமின்றி மேற்படி ரொக்கட் மோட்டார்களை இலங்கை தடுத்து வைத்திருப்பதாகவும் இதனை உடனடியாக தாய்வானிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் பெல்ஜியம் கோரியுள்ளது.

எனினும் இலங்கை இது பற்றி எதுவித அக்கறையும் கொள்ளாது அதனை தமது ஆயுதக்களஞ்சியத்திலேயே வைத்துள்ளது. [153-சி]

## இராணுவ தீர்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்; அண்மைக்காலத்தில் இலங்கைப் படையினர் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் பிசுபிசுத்துப்போய் விட்டன.

வடக்கு-கிழக்கை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசுபடைகள் மேற்கொண்ட பல முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்துவிட்டது. பின் அம்முயற்சி கைவிடப்பட்டுமுள்ளது. இதுதான் பேச்சுவார்த்தை நடாத்த தகுந்த நேரம்.

வடக்கில் முழும்பகுதியும் கிழக்கில் அரைவாசிப் பகுதியும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. பேச்சுவார்த்தை நடாத்த அரசு தயாரானால் புலிகளும் அதற்குத் தயார். புலிகளின் தரப்பில் யார் பேசுவார்கள் என்பதை தலைவர் பிரபாகரனும், மத்திய குழுவும் தீர்மானிக்கும். சுதந்திர ஈழத்திற்கான வாக்கெடுப்பொன்று வடக்கு- கிழக்கில் நடாத்தப்பட்டால் புலிகள் அதற்கு தயார் என்றும் திருகிட்டு தெரிவித்தார். (சி)

★ இயந்திரக் கோளாறினால்

# விமானம் தீப்பற்றி வெடித்து

## 262 'ஹஜ் யாத்திரிகர்' பலி!

[ஜெட்டா]

ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற நைஜீரிய விமானம் தீப்பற்றிக்கொண்டதில் அதில் பயணம்செய்த 262பேர் பலியாகினர்.

நேற்று நைஜீரிய விமானம் ஜெட்டா விமான நிலையத்திலிருந்து ஹஜ் யாத்திரிகர்களை ஏற்றிக்கொண்டு நைஜீரியாவுக்கு புறப்பட்டு சில நிமிடங்களில் இந்த விமானத்தின் இயந்திரம் தீப்பற்றிக்கொண்டது.

விமானஓட்டி விமானத்தை உடனடியாக தரையிறக்கிய போதும் விமானம் தீப்பற்றி எரிந்து வெடித்துச் சிதறியது.

இதில் பயணம் செய்த எவரும் உயிர்தப்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தின் பகுதிகளோடு பிரயாணிகளின் உடல்களும் அப்பிரதேசம் முழுவதும் சிதறிக் கிடந்ததாக தெரியவருகிறது. (பூ)

பல படையினர் பலி (1-ம் பக்கத் தொடர்ச்சி)

## படை முகாம்கள் உஷார்நிலையில்

வடக்கில் உள்ள சகல படை முகாம்களையும் தயார் நிலையில் வைத்திருக்குமாறு படைத்தளபதிகளுக்கு அரசு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனையிறவில் தாக்குதல் நடைபெறும் அதேவேளை புலிகள் வேறு முகாம்களையும் தாக்கலாமென தகவல் கிடைத்துள்ளதாகவும் அரசு தரப்பு செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினமிரவிலிருந்து தொடர்ச்சியாக யுத்த விமானங்களும், ஹெலிகளும் பலாலியிலிருந்து தென்மராட்சியூடாக மாறி மாறி சென்றவண்ணமிருந்தன. வவுனியா, அனுராதபுரத்திலிருந்தும் பலாலியை நோக்கி விமானங்கள் வந்தபடியிருந்தன. இப்பாதைகளால் சென்றுவரும் ஹெலிகள் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்துக்கொண்டுசெல்கின்றன. [56]

## வீதித்தடையை தவிர்க்கவும்

யாழ். கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி ஆகிய பாதைகளில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ளும்படி விடுதலைப் புலிகள் பொதுமக்களை கேட்டுள்ளனர். அவசர தேவைக்காக வேகமாக வரும் வாகனங்களின் வசதிக்காக மக்களை ஒத்துழைக்கும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

## ரத்ததானம் செய்ய அழைப்பு

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு நேற்று காலை தொடக்கம் பாடசாலை மாணவிகள், மற்றும் பொதுமக்கள் இரத்த தானம் செய்துள்ளனர். எனினும்இரத்த வங்கிக்கு இரத்தம் பற்றாக்குறை ஏற்பட்டுவருகின்றது. பொதுமக்கள் இக் காலகட்டத்தினை யுணர்ந்து இரத்ததானம் செய்யுமாறு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் கேட்டுள்ளன. [56]

## புலிகளின் பலத்தை நிர்ணயிக்கும் போர்

ஆனையிறவு முகாமை சூழவுள்ள பகுதியில் கடந்த 48 மணி நேரமாக விமானப் படைகள தமது முழுப் பலத்தையும் பாவித்து அகோர தாக்குதலில் ஈடுபட்டுவருகிறது. பொம்மர், 'வை' ரக விமானங்கள், அவ்ரோக்கள் மற்றும் பல ஹெலிகளும் இப் பகுதியில் தொடர்ச்சியாக குண்டு மாரி பொழிந்த வண்ணமிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. விமானங்கள் வவுனியா, பலாலி பகுதிகளுக்கு சென்று திரும்பிவந்து தொடர்ச்சியாக தாக்குதல் நடத்துகின்றன.

ஆனையிறவு முகாம்பகுதியில் இடம்பெறும் பெரும் யுத்தம் குறித்து சர்வதேசவானொலிகள் முக்கிய செய்திகளை வெளியிட்டுவருகின்றன. இம்முகாமின் வெற்றி தோல்வி இலங்கையில் புலிகளினது பலத்தை நிர்ணயிக்கும் முக்கியமானதொரு போர் என 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது.

## மூன்று புலிகள் வீரமரணம்

ஆனையிறவு இராணுவத்தினர்மீது தாக்குதல் தொடுத்தவாறு முன்னேற முயன்றபோது ஏற்பட்ட மோதலில் இறுதிவரை தீரமுடன் போராடியவர்களில் நேற்றும், நேற்று முன்தினமும் விடுதலைப் புலிகள் தரப்பில் மூவர் வீரமரணமடைந்தனர்.

நேற்று இடம்பெற்ற மோதலில் ரமேஷ் (தம்பித்துரை முத்துக்குமார். இளவாலை), நேற்றுமுன்தினம் 2ம் லெப். சுதன் (செபமாலை யேசுதாசன், மன்னார்), வீரவேங்கை லோ (சின்னத்தம்பி அமிர்தலிங்கம், ஒட்டுசுட்டான்) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த வேங்கைகளுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## சிறிலங்கா படைகள் தத்தளிப்பு

முகாமை மிகக்கிட்ட நெருங்கி விடுதலைப் புலிகள் தாக்கிவருவதால் ஹெலிகப்டர்கள் எதுவும் இராணுமுகாமுக்குள் இறங்க முடியாமல் இருக்கின்றன. தரைமார்க்கமாகவோ கடல்மார்க்கமாகவோ இராணுவ முகாமை அணுக அரசுப் படையினருக்கு இயலாதுள்ளது. இதனால் காயப்பட்ட இராணுவத்தினரை மீட்கமுடியாது அரசபடை தத்தளிக்கின்றனவாம்.

இதேவேளை முக்கியத்துவம் வாய்ந்த இந்த முகாமை இழக்கவோ விடுதலைப்புலிகளிடம் முகாம் வீழ்ச்சியுறவோ எப்படியும் விடமாட்டோம் என கொழும்பில் இராணுவ அதிகாரிகள் பி.பி.சி. செய்தி முகவருக்கு தெரிவித்துள்ளனர்.

## விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ். கண்டி வீதியில் நேற்றுக்காலை வாகனம் ஒன்று மோதியதில் சிறுவன் ஒருவன் பலியானான்.

அரியாலை கதிரேசன் வீதியைச் சேர்ந்த ஆனந்தராசா ஆனந்தரூபன் (13 வயது) என்பவரே மரணமானவராவார். (56]

## அவசர அழைபபு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சாரணர்களும் திரிசாரணர்களும், சாரணத் தலைவர்களும், சாரணமுக்கியஸ்தவர்களும் இன்று காலை 10 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'பாலம்' நிறுவனத்தில் கூடுமாறு வேண்டப்படுகின்றனர்.

## பேச்சை ஆரம்பிக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பேட்டியில் அவர்மேலும் குறிப்பிடுகையில்: பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசு நிபந்தனை விதிக்கிறது. ஆனால் நிபந்தனையின்றிப்பேச புலிகள் தயாராயிருப்பதாக ஏற்கனவே புலிகள் அறிவித்துள்ளனர்.

சில முன்நிபந்தனைகளை அரசு தொடர்ந்தும் வற்புறுத்தி வருகிறது. அரசியல் தீர்வில் நாட்டமின்றி இராணுவத் தீர்விலேயே அவர்கள் நாட்டம் கொள்வதாக இது உணர்த்துகிறது.

கொழும்பு கூட்டுப்படையக குண்டுவெடிப்புக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை. இதற்குச் சூத்திரதாரியாக சயனைட் அருந்தி மரணமடைந்ததாக கூறப்படும் வரதனுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை.

## பிற்போடப்பட்டது

[யாழ்ப்பாணம்]

வடபிரதேசத்தின் நிர்வாகமையத்துக்கான இட அமைவு பற்றி 13ம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இக்கருத்தரங்குக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ராஜீவின் கொலையில் புலிகள் சம்பந்தப்படவில்லை. அவரைக் கொன்றதாகக் கூறப்படும் பெண், இந்தியப் படை இலங்கையில் நின்றபோது பாதிக்கப்பட்ட ஒருவராய்க்கூட இருக்கலாம். எனினும் இது தான் சரி என்று கூறுவதற்கில்லை என்றார். [சி]

தென்மராட்சி நோக்கி

# ஷெல் தாக்குதல்

[சாவகச்சேரி]

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு பத்துக்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் தென்மராட்சிப் பகுதியை நோக்கி ஏவப்பட்டன இதேவேளை ஹெலியிலிருந்து கலிபர் தாக்குதலும் நடத்தப்பட்டது.

மட்டுவில் கந்தசாமி கோவிலடி மடத்தடிச் சந்தி, கல்வயல், ஐயனார் கோவிலடி, தபால் நிலைய வீதி, சங்கத்தானை, கச்சாய் வீதி ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழுந்து வெடித்ததில் பல வீடுகள் சேதமடைந்தன. [155-56]

## ராஜீவ் கொலையாளியின் சடலம் புதைக்கப்பட்டது

(சென்னை)

ராஜீவ் காந்தியை குண்டு வைத்துக்கொன்றகொலையாளி தனுவின் பூதவுடல் இரகசியமான இடமொன்றில் புதைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீபெரம்புத்தூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உடல் சிதறிப் பலியான தனுவின் முகப்பகுதி பாதிக்கப்படாமல் கண்டு எடுக்கப்பட்டு பின்னர் உடல் பகுதிகளை பொருத்தி சடலம் பாதுகாக்கப்பட்டு பல்வேறு பரிசோதனைகளுக்கும் இச்சடலம் பயன்படுத்தப்பட்டது.

தேவையேற்படின் மீண்டும் எடுப்பதற்கு வசதியாகவே தனுவின் பூதவுடல் இரகசியமான இடத்தில் புதைக்கப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல வெளியிட்டுள்ளன. (க)

## வீடுகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்கள்.

இதேவேளை வேறு இடங்களிலும் ஈழத்தமிழர்கள் வாடகைக்கு வீடுகள் எடுக்க முடியாத நிலையில் பெரும் சிரமத்தை அனுபவித்து வருகிறார்கள்.

## பொம்மருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டார். இருவர் காணமல் போய்விட்டனர்.

இறந்தவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. [56]

## மட்டக்களப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியிலுள்ள தமிழர்களைத் தாக்கியும், வீடுகளைக் கொள்ளையடித்தும், 50 வீடுகளைத் தீமூட்டியும் எரித்துமுள்ளனர்.

குடும்பத் தலைவர்கள், இளைஞர்கள் உட்பட ஆறு தமிழர்கள் கடத்தப்பட்டனர்.

## நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ப. நோ. கூ. சங்க 13-ஆம், 14-ஆம் கட்டங்களுக்குரிய நிவாரணப் பொருட்கள் இரு கட்டங்களுக்கும் ஒரே தடவையில் சுழிபுரம் வழக்கம்பரையில் முன்னர் வழங்கிய கிளைகளில் 2-ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது. அதே கிளைகளில் நிவாரணத்திற்கு அல்லாது சீனி கிலோ ரூபா 38/-படி ஒரு அட்டைக்கு 2 கிலோ வீதம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ★ இந்தியா மறுபரிசீலனை

[புதுடில்லி]

இலங்கை விடயத்தில் இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை மறுபரிசீலனை செய்யும் என்று புதுடில்லியில உயர்அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்து விலகி மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்கு இடைப்பட்ட காலத்தில் சில முக்கியமான சம்பவங்கள் நடந்துள்ளமையே இதற்கான காரணம் என்றும் அவர் கூறினார்.


## உதவிவைத்திய உத்தியோகத்தர்களை ஆறு மாத கால உள்ளக பயிற்சியில் ஈடுபடுத்தல்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மார்ச்-ஏப்பிரல் 90 இறுதிப்பரீட்சையில் சித்தியெய்திய பின்வரும் உதவி வைத்திய உத்தியோகத்தர்கள் 15-07-91 தொடக்கம் 6 மாத காலத்திற்கு எனது பிராந்தியத்தில் உள்ளக பயிற்சியில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். இவர்கள் 15-07-91 ற்கு முன்னராக எனது பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

பெயர்

[1] செல்வி அலெக்ஸாட்டர் காமெல் சுகன்யா
[2] செல்வி தர்மலிங்கம் ஜீவன்ஜானு
[3] செல்வி சிவராமலிங்கம் குமுதினி
[4] செல்வி சோமலிங்கம் மங்கையர்மணி
[5] செல்வி கோபாலபிள்ளை மாலினி
[6] செல்வி சுவாம்பிள்ளை மரினு பிறேமினிதேவி
[7] செல்வி துரைசிங்கம் பிறேமாதேவி
[8] செல்வி கணபதிப்பிள்ளை பத்மநந்தினி
[9] செல்வி நடராஜா ராஜலெட்சுமி
[10] செல்வி ரட்ணம் சுமதி
[11] செல்வி சிவபாலன் வள்ளிரமணி
[12] செல்வி ஐயாத்துரை பூவதி
[13] திரு. சின்னத்துரை நவரத்தினராஜா

டாக்டர் ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

39, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். [எ 1435]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜுலை 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81